RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-5 | இதழ்- 259 | செப்டம்பர் 23, 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்து மாணவர்களுடன் உணவருந்திய முதல்வர் விஜய்

சென்னை: செப்.23-

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கான பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை முதல்வர் விஜய் சென்னையில் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை திருவான்மியூரில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைத்து, மாணவர்களுக்கு உணவு பரிமாறி, அவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். தொடர்ந்து பள்ளி வளாகத்தை பார்வையிட்டு, மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, ராஜ்மோகன், ஜெகதீஸ்வரி, தலைமைச் செயலர் சாய்குமார் மற்றும் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

முதல்வர் விஜய் வருகையையொட்டி, பள்ளி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை போலீஸார் மேற்கொண்டனர். மேலும், முதல்வர் விஜய்யை காண்பதற்காக பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பள்ளிக்கு வெளியில் திரண்டிருந்தனர்.

இடைத்தேர்தல் நடைபெற உள்ள மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகள் தவிர்த்து மற்ற அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

காலை உணவுத் திட்டம்

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் நோக்கத்தில் முதல்வரின் காலை உணவுத் திட்டம் கடந்த 2022 செப்.15-ம் தேதி தொடங்கப்பட்டது. பின்னர், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது.




இத்திட்டத்தின்கீழ் தினமும் காலையில் கிச்சடி, பொங்கல் என தினமும் ஏதேனும் ஒரு வகை உணவு வழங்கப்படுகிறது. அந்த வகையில், தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 37,447 அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 19.34 லட்சம் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

தவெக ஆட்சிக்கு வந்த பிறகு, காலை உணவுத் திட்டத்துக்கு காமராஜர் பெயர் சூட்டப்பட்டு, 6 முதல் 8-ம் வகுப்புகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்' விரிவாக்கத் தொடக்க விழா இன்று காலை 8.30 மணி அளவில் நடைபெற்றது.

காமராஜர் பிறந்த விருதுநகரில் உள்ள பள்ளியில் இத்திட்டத்தை முதல்வர் விஜய் செப்.17-ம் தேதி தொடங்கி வைப்பார் என்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. முதல்வர் விஜய் லண்டனுக்கு அரசுமுறைப் பயணம் சென்றதால் திட்டம் தள்ளிவைக்கப்பட்டு, சென்னையில் இன்று நடந்தது.

இதன்மூலம் தமிழகம் முழுவதும் உள்ள 15,910 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 15.30 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். இதற்காக நடப்பு நிதி ஆண்டில் கூடுதலாக ரூ.217 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பெற்றோர்களுக்கு குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்)

"அன்பார்ந்த பெற்றோருக்கு, வணக்கம். பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் உற்சாகத்துடன் பள்ளிக்கு வருகை புரிந்து, சிறப்பாகக் கல்வி கற்பதற்கு ஏதுவாக சத்தான, சுவையான காலை உணவு 22.9.2026 (செவ்வாய்க்கிழமை) முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." - பிரியமுடன், ச.ஜோசப் விஜய், தமிழ்நாடு முதலமைச்சர், என்று குறிப்பிட்டு பள்ளி மாணவர்களின் பெற்றோர்களின் கைபேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) அனுப்பப்பட்டது.

மெனு என்ன?

சென்னை - திருவான்மியூர் அரசு நடுநிலைப் பள்ளியில் முதல்வர் விஜய், நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார். இதில் மாணவர்களுக்கு வெண் பொங்கல், சாம்பார் வழங்கப்பட்டது. முதல் நாள் என்பதால் இன்று சக்கரைப் பொங்கலும் வழங்கப்பட்டது.

# அயோத்தி ராமர் கோயிலில் காணிக்கை திருட்டு: 105 சம்பவங்கள் சிசிடிவியில் பதிவானதாக உச்ச நீதிமன்றத்தில் தகவல்

புதுடெல்லி: செப்.23-

அயோத்தியில் உள்ள ராமர் கோயிலில் காணிக்கை திருடப்பட்ட 105 சம்பவங்கள் கோயிலில் உள்ள சிசிடிவி கேமராக்களில் பதிவாகியுள்ளன என்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அயோத்தி ராமர் கோயிலில் இந்த ஆண்டு தொடக்கத்தில் காணிக்கை திருட்டு விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து, ராமர் கோயில் அறக்கட்டளையின் முக்கிய நிர்வாகிகளான சம்பத் ராய் மற்றும் அனில் மிஸ்ரா ஆகியோர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். முன்னாள் ராணுவ அதிகாரியான ஜிதேந்திர மிஸ்ரா தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பாக, அவினாஷ் சுக்லா, அனுகல்ப் மிஸ்ரா, லவ்குஷ் மிஸ்ரா, மணீஷ் குமார் யாதவ், கருணேஷ் பாண்டே, ராமசங்கர் மிஸ்ரா, சுபாஷ் ஸ்ரீவஸ்தவா மற்றும் டின்னு ஆகிய 8 பேர் கைது செய்யப்பட்டனர். உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இவ்வழக்கு விசாரணையின்போது.

மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜராகி, "காணிக்கை திருட்டு தொடர்பாக விசாரணை நடத்தி வரும் எஸ்ஐடி



அறிக்கையை மேற்கோள் காட்டி, அயோத்தியில் உள்ள ராமர் கோயிலில் காணிக்கை திருடப்பட்ட 105 சம்பவங்கள் கோயில் சிசிடிவி கேமராக்களில் பதிவாகியுள்ளன. எஸ்ஐடி-யின் விசாரணை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. வரும் 25-ம் தேதிக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்" என்றார்.

முன்னதாக, வழக்கை விசாரித்தபோது, எஸ்ஐடி தாக்கல் செய்த நிலவர அறிக்கையை உச்ச நீதிமன்றம் ஆய்வு செய்தது. விசாரணையின்போது, இதுவரை எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். காணிக்கை திருட்டு தொடர்பாக என்னென்ன ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட ஆதாரங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

சிசிடிவி காட்சிகள், சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் பிற ஆதாரங்கள் தொடர்பான விவரங்களும் நீதிமன்றத்தில் பகிரப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்களை அடையாளம் காண சிசிடிவி காட்சிகள் மற்றும் பிற ஆவணங்கள் எவ்வாறு ஆய்வு செய்யப்பட்டன என்பது குறித்த விவரங்களும் நிலவர அறிக்கையில் இடம் பெற்றிருந்தன. அதை உச்சநீதி மன்றம் பதிவுசெய்து கொண்டது.

செப்டம்பர் 25-ம் தேதி குற்றப்பத்திரிக்கை தாக்கல்

அயோத்தி ராமர் கோயில் காணிக்கை திருட்டு வழக்கில் மேலும் இருவர் கைதாக உள்ளனர். இந்த வழக்கில் செப்டம்பர் 25-ல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது. அயோத்தி ஸ்ரீராமர் கோயில் காணிக்கை திருடப்பட்ட விவகாரம் தொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். எஸ்ஐடி தனது விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது. இந்த வழக்கு தொடர்பாக விசாரிக்க இரண்டாவதாக ஒரு எஸ்ஐடியை உத்தர பிரதேச அரசு நியமித்தது.

அதன் விசாரணையில் மேலும் சில முக்கியத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதன்படி இந்த வழக்கில் மேலும் இருவர் விரைவில் கைதாவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஜூன் 25-ல் பதிவான இந்த வழக்குக்கான 90 நாள் காலக்கெடு செப்டம்பர் 25-ல் முடிவடைகிறது.

எனவே செப்டம்பர் 25-ம் தேதிக்குள் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யக் காவல் துறை தயாராகி வருகிறது. இதனிடையே, ஸ்ரீராமஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட சிஇஓ ஜிதேந்திரா மிஸ்ரா தகுதியற்றவர்களை பணிநீக்கம் செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு தயாராகி வருகிறார்.

# 4.50 கோடி ரூபாய் நோட்டுகளால் விநாயகருக்கு அலங்காரம்

விஜயவாடா: செப்.23-

ஆந்திராவில் விநாயகருக்கு 4.50 கோடி மதிப்பிலான ரூபாய் நோட்டுகளால் அலங்காரம் செய்யப்பட்டது பக்தர்களை வெகுவாகக் கவர்ந்தது.

விநாயகர் சதுர்த்தியை யொட்டி ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் பல அடி உயர விநாயகர் சிலைகள் அமைக்கப்பட்டன. விநாயகர் சதுர்த்தி முடிந்து ஒரு வாரம் கடந்தபோதும், சில இடங்களில் இன்னமும் விநாயகர் சிலைகள் கரைக்கப்படாமல் தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று வருகின்றன.



ஆந்திராவின் என்.டி.ஆர். மாவட்டம், நந்திகாமா வாசவி மார்க்கெட் பகுதியில் கணபதி உற்சவ கமிட்டியினர் 44-வது ஆண்டாக இந்த ஆண்டும் விநாயகர் சதுர்த்தியை விமரிசையாக கொண்டாடினர்.

குறிப்பாக விநாயகர் சிலை பந்தல் 4.50 கோடி மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இது பக்தர்களை வெகுவாக கவர்ந்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பலத்த பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

இதேபோன்று தெலங்கானாவில் வாரங்கல் சிவாநகரில் வாசவி அறக்கட்டளையினர் சார்பில் விநாயகருக்கு 1.93 கோடி மதிப்பிலான ரூபாய் நோட்டுகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இந்த விநாயகரை காணவும் பக்தர்கள் திரண்டு வந்தனர்.

# இலவச திட்டங்களால் உண்மையான வளர்ச்சி சாத்தியமா? - சீமான் கேள்வி

தாராபுரம்: செப்.23-

இலவச திட்டங்களால் உண்மையான வளர்ச்சி சாத்தியமாகுமா என, தாராபுரம் இடைத்தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சீமான் கேள்வி எழுப்பினார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகாவை ஆதரித்து, தாராபுரத்தில் நேற்று நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியதாவது: தேர்தல் காலத்தில் வழங்கப்படும் இலவச வாக்குறுதிகளால் நாட்டின் கடன் சுமை அதிகரிக்கிறது.

இலவசப் பேருந்து திட்டங்களைச் செயல்படுத்தும்போது, அதை இயக்கும் ஓட்டுநர்கள், நடத்துநர்களுக்கான ஊதியம், பேருந்துகளைப் பராமரிக்கும் செலவு மற்றும் புதிய பேருந்துகள் வாங்குவதற்கான நிதி ஆகியவை எங்கிருந்து பெறப்படுகின்றன? நாட்டின் ஒட்டுமொத்த கடன் சுமை அதிகரித்துவரும் சூழலில், இத்தகைய இலவசத் திட்டங்கள் தற்காலிகமானதாகவே இருக்கும். பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது இத்திட்டங்கள் நிறுத்தப்பட்டால்,



அது மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தும்.

உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது, நமது கல்வி மற்றும் மருத்துவக் கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும். அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்துவதே உண்மையான வளர்ச்சிக்கான வழியாகும். இலவச திட்டங்களால் வளர்ச்சி சாத்தியமாகுமா? நிலத்தடி நீர் மாசுபாடு மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தீவிரக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தொழிற்சாலைக் கழிவுகளால் நிலத்தடி நீர் நஞ்சாவதும், பிளாஸ்டிக் கழிவுகளின் பெருக்கமும் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும். வாக்கு அரசியலுக்காக இலவசங்களை அள்ளித்தருவதை விட்டுவிட்டு, மக்களுக்குத் தரமான கல்வி, வேலைவாய்ப்பு, சிறந்த கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுகாதாரமான சூழலைத் தருவதே நிலையான தீர்வாக அமையும். எனவே, உண்மையான மாற்றத்தை பெற வாக்கு பதிவின் போது 'விசிலை விடு விவசாயியை தொடு'. தமிழகத்துக்கான புதிய மாற்றம் தாராபுரத்தில் இருந்து தொடங்கட்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கில் அமைச்சர்கள், எம்பி.க்கள் விஜபி தரிசனம் ஏன்? - அமைச்சர் ரமேஷ் விளக்கம்

திருச்சி: செப்.23-

"மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேக ஏற்பாடுகளை கவனிக்கவே விஜபி சேவையில் அமைச்சர்கள், எம்பிக்கள் சென்றனர்," என அமைச்சர் ரமேஷ் விளக்கமளித்துள்ளார்.

தமிழகத்தில் காமராஜர் காலை உணவு திட்ட விரிவாக்கம் தொடங்கி வைக்கப்பட்டது. திருச்சி ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட திருச்செந்துரை அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக இந்து சமய அறநிலை துறை அமைச்சர் ரமேஷ் திட்டத்தை தொடங்கி வைத்து மாணவர்களோடு அமர்ந்து உணவருந்தினார். இந்த நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் கிரிஸ்ட்டோபர் திலக், மாவட்ட ஆட்சியர் பிரத்திக் தயாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ரமேஷ், "திருச்சி மாவட்டத்தில் உள்ள 590 பள்ளிகளில் 63,157 மாணவர்கள் பயன்பெறும் வகையில் இன்று



காலை உணவு திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. திமுக ஸ்ரீரங்கம் பகுதி செயலாளர் மீது கோயில் நிலத்தை போலியாக பத்திரப் பதிவு செய்துள்ளதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு திட்டமிட்டே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அப்படி இருந்தால், அவர் ஏன் முன் ஜாமீன் கோரி நீதிமன்றத்தை நாடி உள்ளார். உண்மை இருந்தால் அதை அவர் நேரடியாக சந்திக்கலாம்; ஏன் அவசர அவசரமாக முன்ஜாமீன் வாங்குகிறார்.

விசாரணை செய்ய உள்ளோம் எனக் கூறுவதற்கே அவர் முன் ஜாமீன் வாங்குகிறார். எங்கே தவறு இருக்கிறதோ அங்கே பயமிருக்கிறது, அதனால்தான் இது போன்று அவர்கள் செய்து வருகிறார்கள்.

நான் திருவண்ணாமலையில், முன்னாள் அமைச்சர் சேகர்பாபு பொது தரிசன வழியில் சென்றது குறித்து பேசியதையும், மதுரையில் பேசியது குறித்தும் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு விமர்சனம் செய்துள்ளார். ஆப்பிளையும் ஆப்பிளையும் ஒப்பிடலாம்; ஆப்பிளையும் ஆரஞ்சையும் எப்படி ஒப்பிட முடியும். இவர்களுக்கு அடிப்படை அறிவே கிடையாது.

மதுரை கும்பாபிஷேகத்தில் பல வேலைகள் இருந்ததால் ஏற்பாடுகளை கவனிக்க நாங்கள் விஜபி தரிசன வழியில் சென்றோம். சாதாரண நாட்களில் விஜபி தரிசன வழியில் செல்வது குறித்து பேசினால் அவர் கும்பாபிஷேக நாளில் விஜபி தரிசனம் வழியில் செல்வது குறித்து பேசுகிறார்.

கும்பாபிஷேக விழாவில் சிலரை எம்எல்ஏ ஒருவர் அழைத்துச் சென்றது தொடர்பாக அவர் விளக்கம் அளித்துள்ளார். சட்டமன்றத்தில் பாட்டு பாடுகிறார்கள், பாட்டு பாடுகிறார்கள் எனக் கூறிக்கொண்டே மூன்று மாதமாக எதிர்க்கட்சித் தலைவர் பாட்டு பாடி வருகிறார்.

சட்டப்பேரவைக்கு வந்து கிளாசை கவனித்தால் யார் அமைச்சர் யார் எம்எல்ஏ என்பது தெரியும். ஆனால் கிளாசை கட் அடித்து விட்டு சென்று விடுவதால் அப்படித் தெரியவில்லை. முன்னாள் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின், திருமணம் காதுகுத்து போன்ற நிகழ்ச்சிகளில் அவருக்கு எழுதித் தரும் வசனங்களை பேசி வருகிறார்" என்றார்.



# ஹாக்கி சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு

நீலகிரி, செப்.23-

நீலகிரி மாவட்டம் குன்னூர் ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாட்டின் கீழ் இயங்கி வரும் ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரிஸ் அமைப்பின் தேர்தல் ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாட்டின் வழிகாட்டுதல் படி தேர்தல் நடைபெற்றது தேர்தலின் பார்வையாளராக ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாட்டின் செயலாளர் டாக்டர் செந்தில் ராஜ்குமார் கலந்துகொண்டு தேர்தலை மேற்பார்வை செய்தார். இத்தேர்தலில் அதிகாரியாக ராஜேஷ்குமார் ஜேம்ஸ் செயல்பட்டு தேர்தலை நடத்தினார் தேர்தலில் வெற்றி பெற்று புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் கூட்டம் பின்னர் நடைபெற்றது அதில் மாவட்டத்திற்கு தேவையான செயற்கை புல்வெளி மைதானம் அமைக்க முயற்சிப்பதும் வீர வீராங்கனைகளை தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெற செய்வதும் மாவட்டத்தில் உள்ள ஹாக்கி வீரர்களை ஊக்கிவிப்பதும் என பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது முடிவில் மூத்த தலைவர் அனந்த கிருஷ்ணன் நன்றி கூறி விழா சிறப்பாக நடைபெற்றது.

# பூண்டி அருகே நெல்வாய் ஊராட்சிஒன்றிய தொடக்க பள்ளி மாணவர்களுக்கு சீருடை, பேக், மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி




திருவள்ளூர்:-
செப்.23-

பூண்டி அடுத்த நெல்வாய் கிராமத்தில் உள்ள ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சென்னை வி.வி.வி. எஜுகேஷன் சொசைட்டி நிறுவனம் மற்றும் முத்தமிழ் கிராம வளர்ச்சி நிறுவனம் சார்பில் பொருளாதரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு சீருடை பேக் கல்விக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு வருகைபுரிந்த அனைவரையும் முத்தமிழ் கிராம வளர்ச்சி நிறுவனர் முத்தமிழ்ச்செல்வி வரவேற்றார்

இந்நிகழ்ச்சியில் சென்னை வி.வி.வி. எஜுகேஷன் சொசைட்டி நிறுவனர் தன்வீர்அகிலன் சிறப்பு அழைப்பாளர்களாகவும் மற்றும் மு.ஊ.ம.தலைவர் பரமேஸ்வரி, தலைமையாசிரியர் கே.மணி கலந்துகொண்டு மாணவர்களுக்கு சீருடை,பேக், கல்விக்கான உபகரணங்களை வழங்கி சிறப்பித்தனர் மேலும் இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் எம்.கஜேந்திரன், ஊராட்சி செயலாளர் எம்.கோபி, கூனிபாளையம்பள்ளி ஆசிரியர் எம்.பிரபு என்.ஜி.ஓ. இளங்கோவன் கலந்து கொண்டு சிறப்பித்தனர் நிகழ்ச்சியின் முடிவில் தன்னார்வலர் பி.குமாரி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்

# காலை உணவு திட்டத்தினை துவக்கி வைத்த மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்



சென்னை, செப்.23-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னை திருவான்மியூர் காந்தி கிராமம், சென்னை நடுநிலைப்பள்ளியில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தினை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.நா.திருப்பதி ஆகியோர் பங்கேற்று மாணவியர்களுக்கு காலை உணவுப் பரிமாறினர்கள். உடன் மேற்கு மாவட்ட செயலாளர் முனுசாமி, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் விஜயகுமாரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அருள்மொழிதேவன், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இந்திராணி, மாதிரி பள்ளி தலைமை ஆசிரியர் அசோகன், காலை உணவுத் திட்டப் பணியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# நாடார் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் மின்னல் ஸ்டீபன் அவர்களின் 51வது பிறந்தநாள் விழா

சென்னை செப்.23-

சென்னையில் நாடார் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற சங்கங்களின் கூட்டமைப்பு நிறுவனர் தலைவர் மின்னல் H.ஸ்டீபன் நாடார் அவர்களின் 51வது பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது

இக்கூட்டத்தில் நாடார் சங்கங்களின் கூட்டமைப்பின் செயல்பாடுகள், எதிர்கால திட்டங்கள் மற்றும் சமூக நலப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில், சமூக ஒற்றுமை மற்றும் நலப்பணிகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக பல்வேறு கருத்துகள் பரிமாறிக் கொண்டனர்

இந்த நிகழ்ச்சியில் விஜிபி குழுமத்தின் தலைவர் வி.ஜி.சந்தோஷம், திரைப்பட ஸ்டண்ட் மாஸ்டர் ஜாக்குவார், எஸ்.



பி.தங்கம், தேசிய நாடார் சங்க பொதுச் செயலாளர் இன்ஜினியர், டி.விஜயகுமார், கிருஷ்ணா, தாம்பரம் தொகுதி தலைவர் ஞானப்பால் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



# மாற்றுத்திறனாளிகளின் நலம் விரும்பும் தேசிய அமைப்பு

தேனி செப்.23-

டெல்லி செல்லும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி சக்ஷம் தேனி மாவட்ட பொறுப்பாளர்களின் முயற்சியின் மூலம் கண் தானம், ரத்த தானம், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் ரயில் பயணம் உள்ளிட்ட சமூக நலப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இதன் ஒரு பகுதியாக, பாரத நாட்டின் தலைநகர் நியூ டெல்லிக்கு ரயில் பயணம் மேற்கொள்ளும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களது பயணம் வெற்றிகரமாக அமையவும் தேனி மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தேனி மாவட்ட ஆட்சியர் மரு. வைத்தியநாதன், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S. பிரவீன் கௌதம், தேனி மாவட்ட நல்லோர் வட்டம் சமூக நல அமைப்பின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக நடைபெறும் இந்நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.



# செங்குன்றம் சைதானி பீபீ தர்காவில் முஹ்யித்தீன் ஆண்டகை கொடியேற்றம் நிகழ்ச்சி

மாதவரம், செப்.23-

பெருமானார் (ஸல்) அவாக்ள் மீது புகழ் பாடும் பேரவை சார்பில் முஹ்யித்தீன் ஆண்டகை கொடியேற்றம் செங்குன்றம் நாரவாரிக்குப்பம் பேரூராட்சி சைதானி பீபீ தர்காவில் நடைபெற்றது.சிறப்பு அழைப்பாளராக நாகூர் தர்கா பரம்பரை கலீஃபா சஜ்ஜாதா நஷீன் டாக்டர் கலீஃபா மஸ்தான் சாகிப் காதிரி கலந்து கொண்டு தர்காவில் அடக்கமாகியுள்ள சைதானி பீபீ அம்மாவிற்கு துஆ ஓதி பச்சை போர்வை, பூ மாலை போற்றினார். பின்னர் முஹ்யித்தீன் ஆண்டகை கொடியை ஏற்றி வைத்து உலக மக்களுக்காகவும் இஸ்லாமியர்களுக்காகவும் சிறப்பு பிரார்த்தனை செய்தார்.துருக்க சத்திரம் டிரஸ்ட் டிரஸ்டியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெ.எம். ஹாரூண் ரஷீத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சைதானி பீபீ கொடியை ஏற்றி வைத்தார்.இதில் பிபிசி பிரைவேட் லிமிடெட் இயக்குநர் எஸ்.ஏ. சையது அஹமது காதிரி, செங்குன்றம் ஆயிஷா மஸ்ஜித் செயலாளர் எம். அப்துல் லத்தீப், அம்பத்தூர் காவேரி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் மீரான் உள்ளிட்ட ஆயிஷா மஸ்ஜித் மற்றும் சுற்றுவட்டார பள்ளிவாசல் நிர்வாகிகள், ஜமாஅத்தார்கள் திரளாக கலந்து கொண்டனர். பின்னர் அனைவருக்கும் அறுசுவை மட்டன் பிரியாணி வழங்கப்பட்டது.

சைதானி பீபீ தர்கா நிர்வாகி எஸ். சையத் கரீமுல்லா உசேனி உள்ளிட்ட தர்கா நிர்வாகிகள் ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தார்.

# தமிழகம் முழுவதும் குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சி, இந்து திருகோயில் கூட்டமைப்பு சார்பில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம்

## 1 லட்சம் விநாயகர் சிலைகள் நீலாங்கரை கடற்கரையில் கரைக்கபட்டது

குரோம்பேட்டை
செப்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட குரோம்பேட்டையில் இந்து திராவிட மக்கள் கட்சி மற்றும் இந்து திருக்கோயில் கூட்டமைப்பு சார்பில் தேசிய தலைவர் டாக்டர் ரமேஷ்பாபுஜி தலைமையில் விநாயகர் சதுர்த்திவிழா விநாயகர் சிலைகள் விசர்ஜன ஊர்வலம் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக இந்து தமிழர் கட்சி நிறுவனர் ராம ரவிக்குமார் மற்றும் அகில இந்திய இந்துக்கள் கட்சி நிறுவனதலைவர் செஞ்சிராஜா விநாயகர் சதுர்த்தி விழா முன்னிட்டு விநாயகர் விசர்ஜன ஊர்வலத்தில் கலந்துகொண்டனர் விநாயகர் விசர்ஜன ஊர்வலம் குரோம்பேட்டை, ஜி.எஸ்.டி சாலை அருகே நடைபெற்றது. 12 அடி உயர விநாயகர் சிலைக்கு சிறப்பு பூஜை செய்து பக்தர்களுக்கு




சுமார் 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கினர். இந்து திராவிட மக்கள் கட்சி சார்பில் குன்றத்தூர், மாங்காடு, பல்லாவரம், பம்மல் நாகல்கேனி, குரோம்பேட்டை, படப்பை, கோவிலம்பாக்கம், நன்மங்கலம், ஒட்டியம்பாக்கம் என பல்வேறு பகுதிகளில் உள்ள 1 அடி முதல் 12 அடி உயரம் வரை உள்ள 1 லட்சம் விநாயகர் சிலைகளை வாகனத்தில் ஏற்றப்பட்டு மேள, தாளம் முழங்க சானடோரியம் வழியாக கிழக்கு தாம்பரம் லெப்டினட் முகுந்த் வரதராஜன் சாலை வழியாக நீலாங்கரை கடற்கரையில் கரைக்கபட்டன ஊர்வலத்தில் இந்து திராவிட மக்கள் கட்சி மற்றும் இந்து திருக்கோயில் கூட்டமைப்பு நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.




# தேனியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன் காலை உணவினைப் பரிமாறி, மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்

தேனி, செப்.23-

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்கள் சென்னை, திருவான்மியூர், காந்தி கிராமம் நடுநிலைப்பள்ளியில், தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில்பெருந்தலைவர்காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினைதொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்டம் உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றியம் மேலச்சிந்தலைச்சேரி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,கம்பம் சட்டமன்ற உறுப்பினர்.பி.எல்.ஏ.ஜெகநாத்மிஸ்ரா முன்னிலையில் மாணவர்களுக்கு காலை உணவினைப் பரிமாறி, மாணவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்கள்.

இத்திட்டத்தின் மூலம் தேனி மாவட்டத்தில் ஊராட்சிப் பகுதிகளில் உள்ள 168 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 13,363 மாணவ, மாணவியர்களும், பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள 50 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 4,636 மாணவ, மாணவியர்களும், நகராட்சிப் பகுதிகளில் உள்ள உள்ள 85 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 12,057 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் 303 பள்ளிகளில் பயிலும் 30,056 மாணவர்கள் பயனடைவார்கள்.

இந்நிகழ்வில், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) .துஷார் ஸ்ரீஹர் ஷிண்டே, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்). வீராச்சாமி, முதன்மைக் கல்வி அலுவலர்.முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு) .சுப்புராம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெருங்களத்தூரில் குடியிருப்பு பகுதிகளில் கழிவுநீர் தேங்கி வருவதால் டெங்கு நோய் பரவுதற்கான அபாயம் உள்ளதாக குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர்கள் தாம்பரம் மாநகராட்சிக்கு எதிராக கோசமிட்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதால் பரபப்பு

தாம்பரம் செப்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்டபுதிய பெருங்களத்தூர், வார்டு 57-ல் உள்ள சேகர் நகர் 1-வது குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 150-க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

இந்த குடியிருப்புப் பகுதியில் இருந்து கழிவுநீர் வெளியேறாமல் ,தீராத பிரச்சினையாக நிலவி வருவதாகக் அப்பகுதி மக்கள் மாநகராட்சி ஆணையருக்கு மனு அளித்துள்ளனர்,

தற்போது இரவு வேலையில் பெய்து வரும் மழை காரணமாக மழை நீருடன் கழிவு நீர் சேர்ந்து குடியிருப்புகுள் தேங்குவதால் நோய் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்று பரவும் அபாயம் இருந்து வருகிறது தாம்பரம் மாநகராட்சி கூடுதல் பொருப்பில் இருக்கும் அவடி ஆனையர் சரண்யா உடனடி நடவடிக்கை



எடுக்க வேண்டும் என்றும,

தொடர்ந்து குடியிருப்பு வளாகத்தி லிருந்து வெளியேறும் கழிவுநீர் கால்வாய், காமாட்சி நகர் 4-வது தெரு வழியாகச் சென்று பிரதான வடிகாலில் கலப்பதில் தொடர்ந்து தடை ஏற்பட்டு வருகிறது. தற்போதைய வடிகாலின் சரிவு மற்றும் நீர் செல்லும் தடம் சரியாக இல்லாததே இந்த நீர்த்தேக்கத்திற்கு முக்கியக் காரணமாகும்,

கழிவுநீர் மீண்டும் குடியிருப்புக்குள் வருவதைத் தடுத்து, தொழில்நுட்ப ரீதியான நிரந்தர வடிகால் தீர்வை வழங்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தியுள்ளனர்,

மேலும் தரைதல பகுதிகள் மற்றும் குடிநீர் ஆழ்துளை கிணறுகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவும், வரவிருக்கும் பருவமழை மற்றும் மழைக்கால நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் அவசர நடவடிக்கை தேவைப்படுகிறது.

ஏற்கனவே ஒவ்வொரு பருவ மழையின் போதும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் இப்பகுதி மக்கள், இந்த முறையாவது தங்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என குடியிருப்பு பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



# மணமக்களை வாழ்த்திய உதயநிதிஸ்டாலின்

மாதவரம், செப்.23-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் அடுத்த சிறுணியம் யாதவா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற சென்னை வடகிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளருமான பாடியநல்லூர் அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலய முன்னாள் செயலாளர் சன் முனியாண்டி இல்ல திருமண வரவேற்பு விழாவில் மணமக்கள் சந்தோஷபாண்டியன் - தர்ஷினி ஆகிய தம்பதியரை உதயநிதி ஸ்டாலின் பூங்கொத்து கொடுத்து வாழ்த்தினார். விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளர் தயாநிதி மாறன், சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம்,, ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே. கர்ணாகரன் திமுக சட்டமன்ற முன்னாள் இன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.




# திருவள்ளூரில் மாவட்ட அளவிலான கேலோ இந்தியா பெண்கள் ஊசு போட்டி

மாதவரம், செப்.23-
திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட அலுவலக வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அளவிலான கேலோ இந்தியா பெண்கள் ஊசு போட்டி மாவட்ட ஸ்போர்ட்ஸ் ஊசு சங்க தலைவர் விஜயராகவன் தலைமையில் நடைபெற்றது. தொழில்நுட்ப இயக்குனர் தண்டபாணி, செயலாளர் தீபன், பொருளாளர் ஜேம்ஸ் துணை தலைவர் தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த போட்டியில் திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட பெண்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக தொழிலதிபர் எம்.ஜி.எஸ். பாலமுருகன், திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவர் விஜயராஜ், இ.ரவி ஆகியோர் கலந்துகொண்டு போட்டி களை தொடங்கி வைத்தனர். இதனைத்தொடர்ந்து போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டி வாழ்த்தினர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஜெகதாப் அரசு உயர்நிலைப் பள்ளியில் காலை உணவு திட்டம் விரிவாக்கம் 6 முதல் 8-ம் வகுப்பு மாணவர்களுக்கு இன்று தொடக்கம்: மாவட்ட நல அலுவலர் அமீர் பாஷா ஆய்வு; தலைமை ஆசிரியர் நந்தகுமார் தலைமையில் நிகழ்ச்சி, ஆசிரியர் பயிற்றுநர் காவேரி மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்பு; 193 மாணவர்கள் பயன்.



■ கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் காலை உணவு திட்டம் விரிவாக்கம் 6 முதல் 8-ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கான திட்டம் இன்று தொடக்கம்: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன், சமூக நுகர்வோர் மாநில பொதுச்செயலாளர் சந்திரமோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது

# கூட்டுறவு ஊழியர்களை அவமதித்ததாக புகார்: தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்



மதுரை, செப்,23-
கூட்டுறவு கடன் சங்க ஊழியர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வகையிலும், தரக்குறைவாகவும் பேசியதாகக் கூறப்படும் விவசாய சங்க நிர்வாகி ஈசன் முருகசாமி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு தொடக்க கூட்டுறவு வங்கி பணியாளர்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதுகுறித்து தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், ஈசன் முருகசாமி ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்களில் கூட்டுறவு கடன் சங்க ஊழியர்களை அவமதிக்கும் வகையிலும், வன்முறையைத் தூண்டும் வகையிலும் பேசியதாக தெரிவித்தனர். விவசாயிகளுக்கு கூட்டுறவு ஊழியர்கள் மீது ஏதேனும் குறைகள் இருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சட்டப்பூர்வமாக புகார் அளிக்கலாம். ஆனால் ஊழியர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் பேச்சுகளை ஏற்க முடியாது. எனவே, சம்பந்தப்பட்ட பேச்சின் முழு உள்ளடக்கத்தையும் ஆய்வு செய்து, உரிய விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் TACBEA மாவட்ட கௌரவ தலைவர் ராஜா, கௌரவ செயலாளர் ஆசிரியத்தேவன், மாவட்ட தலைவர் எஸ்.கணேசன், பொருளாளர் மதியழகன், துணைத்தலைவர்கள் சோமசுந்தரம், முருகன், இணைச்செயலாளர் நீதி முத்தையா, ஓய்வுபெற்றோர் சங்க மாவட்ட தலைவர் திருச்சிற்றம்பலம் உள்ளிட்ட நிர்வாகிகள், கூட்டுறவு நிறுவனப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு தொழிற்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில், சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளிக்கப்பட்டது.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னை திருவான்மியூர் காந்தி கிராமம், சென்னை நடுநிலைப்பள்ளியில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தினை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன்,இ.ஆ.ப., திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா.திருப்பதி, மேற்கு மாவட்ட செயலாளர் முனுசாமி ஆகியோர் பங்கேற்று மாணவியர்களுடன் அமர்ந்து காலை உணவு அருந்தினார்கள். உடன் மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, மாவட்ட ஆட்சியரின் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அருள்மொழிதேவன், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இந்திராணி, அசோகன், காலை உணவுத் திட்டப் பணியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை ஆய்வு செய்த எம்.எல்.விஜய் பிரபு -தவெக எம்.எல்.ஏ

மாதவரம்.செப்.23-
தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை துவக்கி வைத்தார்.இத்திட்டத்தின் செயல்பாடுகள் முறையாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், புழல் பொப்பிலிராஜா அரசு மேல்நிலைப்பள்ளியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் தவெக செயலாளருமான எம். எல்.விஜய்பிரபு நேரில் சென்று பள்ளியில் நடைபெறும் காலை உணவு வழங்கும் பணிகள், உணவின் தரம், சுகாதாரம் மற்றும் மாணவர்களுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

# காவேரிப்பட்டணத்தில் வாட்ஸ்அப் குழு மூலம் மின் பழுதுகள் உடனடி சரி முஜீப் நகர் பகுதியில் பழுதான 5 தெருவிளக்குகள் ஒரு மணி நேரத்தில் சீரமைப்பு பொதுமக்கள் பாராட்டு



காவேரிப்பட்டணம், செப்.23-
கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் பகுதியில் கடந்த ஒரு வாரமாக மாலை நேரங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது மின்தடை ஏற்படுவதுடன், தெருமின் விளக்குகளும் பழுதடைந்து வருகின்றன.

பொதுமக்களின் மின்சார குறைகளை உடனுக்குடன் அறிந்து நடவடிக்கை எடுக்கும் வகையில், காவேரிப்பட்டணம் பகுதியில் மின்வாரிய அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், செய்தியாளர்கள் உள்ளிட்டோரின் தொலைபேசி எண்களை இணைத்து வாட்ஸ்அப் குழுக்கள் ஏற்படுத்தியுள்ளனர். இந்த குழுக்களில் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கும் மின்சார பிரச்சினைகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன.

இதன் மூலம் மின்தடை, மின் கம்பிகள் மற்றும் மின்சாதனங்களில் ஏற்படும் பழுதுகள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து தகவல் கிடைத்தவுடன், மின்வாரிய ஊழியர்களுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தி, விரைந்து பழுதுகளை சரிசெய்து வருகின்றனர்.

முஜீப் நகரில் 5 தெருவிளக்குகள் பழுது இந்நிலையில், காவேரிப்பட்டணம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி எதிரில் உள்ள முஜீப் நகரில் 5 தெருமின் விளக்குகள் எரியவில்லை. இதனால் அப்பகுதி இருள் சூழ்ந்து காணப்பட்டது. இதுகுறித்து மின்வாரிய வாட்ஸ்அப் குழுவில் உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவல் கிடைத்ததும் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் பழனிவேல் உத்தரவின் பேரில்,ஊழியர்களுக்கு தகவல் தெரிவித்து, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பழுதடைந்த மின் விளக்கு சுவிட்சுகளை புதியதாக மாற்றினர். சுமார் அரை மணி நேரத்திற்குள் மின்வாரியத்தின் சார்பில் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், மின்வாரிய பணிகள் முடிந்த பின்னரும் தெருவிளக்குகள் எரியாததால், இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகளிடம் கேட்டபோது, தெருவிளக்குகளை இயக்குவது சம்பந்தப்பட்ட ஊராட்சி நிர்வாகத்தின் பொறுப்பு என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து காவேரிப்பட்டணம் வட்டார வளர்ச்சி அலுவலர் சிவப்பிரகாசத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவரது அறிவுறுத்தலின்பேரில், காவேரிப்பட்டணம் ஊராட்சிக்குட்பட்ட பகுதி ஊராட்சி செயலாளர் சக்தி உடனடியாக ஊழியர்களை அனுப்பி, பழுதடைந்த 5 தெருமின் விளக்குகளையும் மாற்றி சீரமைத்தார்.

இதனால் முஜீப் நகர் பகுதியில் கடந்த சில நாட்களாக இருளில் காணப்பட்ட தெருக்கள் தற்போது மீண்டும் வெளிச்சம் பெற்றுள்ளன.

பொதுமக்கள் பாராட்டு மின்வாரிய வாட்ஸ்அப் குழு மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் துரித நடவடிக்கையால் மின்வாரிய பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டதுடன், ஊராட்சி நிர்வாகத்தின் மூலம் தெருவிளக்குகளும் விரைந்து சரிசெய்யப்பட்டதற்கு அப்பகுதி பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

மேலும், இதேபோன்று காவேரிப்பட்டணம் வட்டார வளர்ச்சி அலுவலர் முயற்சி மேற்கொண்டு, வட்டாரத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் முன்னாள் ஊராட்சி தலைவர்கள், கவுன்சிலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் தொலைபேசி எண்களை ஒருங்கிணைத்து வாட்ஸ்அப் குழுக்கள் அமைக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த குழுக்கள் மூலம் குடிநீர் பிரச்சினை, தெருமின் விளக்கு பழுது, சாலை சேதம், கழிவுநீர் பிரச்சினை உள்ளிட்ட பொதுமக்களின் அடிப்படை பிரச்சினைகளை உடனடியாக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும் என்றும், இதனால் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்ய வழிவகுக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மின் பழுதுகளை உடனடியாக சரிசெய்ய நடவடிக்கை எடுத்த மின்வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கும், தெருவிளக்குகளை விரைந்து சீரமைக்க நடவடிக்கை எடுத்த வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி நிர்வாகத்திற்கும் அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர்.

# இடையமேலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் காமராஜர் காலை உணவுத் திட்டம் தொடக்கம்



சிவகங்கை: செப்.23- சிவகங்கை மாவட்டம் இடையமேலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 6 முதல் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் ஏ.குழந்தைராணி நாச்சியார் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முழுவதும் 6 முதல் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் காலை உணவுத் திட்டத்தை முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் இன்று (செப்.22) விரிவுபடுத்தி தொடங்கி வைத்துள்ளார். இந்த விரிவாக்கத்தின் மூலம் கூடுதலாக சுமார் 15.30 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடையமேலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டக் கல்வி அலுவலர் நடேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரமேஷ்கண்ணன், பள்ளித் தலைமையாசிரியர் மீனாட்சிசுந்தரி, சிவகங்கை மேற்கு ஒன்றிய தவெக செயலாளர் மானாகுடி பில்லத்திக்கண்ணன், மாவட்டப் பொருளாளர் கண்ணதாசன், இடையமேலூர் அம்பலகாரர் முனியாண்டி, இடையமேலூர் சேகர் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாட்டில் காலை உணவுத் திட்டம் 2022 செப்டம்பர் 15-ஆம் தேதி மதுரையில் தொடங்கப்பட்டு, பின்னர் பல்வேறு கட்டங்களாக விரிவுபடுத்தப்பட்டது. தற்போது 6, 7 மற்றும் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் துரை, அரசனூர் வீரணன், அசோக், கந்தசாமி, வினோத், கணேசன், ஆதீஷ்வரன், பிரியங்கா, ஜெயசித்ரா உள்ளிட்ட ஆசிரியர்கள், மகளிர் திட்டப் பணியாளர்கள், ஊராட்சி சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக சிவகங்கை மேற்கு ஒன்றிய தவெக மற்றும் இடையமேலூர் கிளை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.குழந்தைராணி நாச்சியாருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.



■ மதுரை மாநகராட்சி மண்டலம்-3 மத்திய அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் (பொ) தி. நாகராஜன் தலைமையில் நடைபெற்றது. முகாமில் சொத்துவரி பெயர் மாற்றம் தொடர்பாக 20 மனுக்கள், காலிமனை வரிவிதிப்பு 3, புதிய சொத்துவரி 6, புதிய குடிநீர் குழாய் இணைப்பு 8, பாதாள சாக்கடை இணைப்பு 6, அடிப்படை வசதிகள் கோரி 12, சுகாதாரம் தொடர்பாக 2, நகரமைப்புப் பிரிவு ஆக்கிரமிப்பு தொடர்பாக 4 மற்றும் இதர கோரிக்கைகள் உள்ளிட்ட மொத்தம் 78 மனுக்கள் பெறப்பட்டன. முகாமில் துணை ஆணையாளர் ஜெய்னுலாப்தீன், உதவி ஆணையாளர் குமரன், நிர்வாக அலுவலர் மணி உள்ளிட்ட மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் சென்னையில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தும்பைப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து உயர்கல்வித்துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன் ,மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்று, மாணவர்களுடன் அமர்ந்து காலை உணவு அருந்தினார்கள் .



■ தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின் விரிவாக்கத்தை சென்னையிலிருந்து தொடங்கி வைத்ததை தொடர்ந்து, மதுரை மாநகராட்சி, இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் இன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர்(பொ)தி.நாகராஜன் , மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., , சட்டமன்ற உறுப்பினர் (மதுரை தெற்கு)எம்.எம்.கோபிசன் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவுகளை வழங்கி, மாணவ, மாணவிகளுடன் அமர்ந்து உணவு அருந்தினார்கள்.







# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் விரிவுபடுத்தப்பட்ட காலை உணவுத் திட்டம் தொடக்கம்

காளையார்கோவில். செப்.23-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம், சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 6 முதல் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

விழாவில் பள்ளித் தலைமை ஆசிரியர் சுரேஷ் வரவேற்றார். காளையார்கோவில் வட்டாரக் கல்வி அலுவலர் பொன்னி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, 6, 7 மற்றும் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இனிப்புப் பொங்கல், வெண்பொங்கல் மற்றும் கிச்சடி ஆகியவற்றை வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார். பள்ளி சார்பில் அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

ஏற்கனவே 1 முதல் 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வரும் நிலையில், தற்போது 6 முதல் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மாணவர்களுக்கு உணவு பரிமாறிய வட்டாரக் கல்வி அலுவலர் பொன்னி, அவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

தொடர்ந்து, பெருந்தலைவர் காமராஜரின் கல்விப் பணிகள் மற்றும் காலை உணவுத் திட்டத்தின் நோக்கம் குறித்து மாணவர்களிடம் எடுத்துரைத்தார். பள்ளியின் காலை வழிபாட்டுக் கூட்டத்தையும் பார்வையிட்டு, தற்காப்புக் கலைப் பயிற்சி மற்றும் தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகை (NMMS) தேர்வுக்கு மாணவர்கள் தயாராகும் முறைகள் குறித்தும் அறிவுரைகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவி டேவிட் அருள் ஷாலினி, குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், காலைச் சிற்றுண்டிப் பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராமப் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் தலைமை ஆசிரியர் சுரேஷ் நன்றி கூறினார். தேசிய கீதத்துடன் விழா நிறைவடைந்தது.

# பத்திரம் காணவில்லை

சிவகங்கை மாவட்டம் சிதம்பரம்நகர், சாம்பவிகா பள்ளி எதிரில், க/எண்: 2/56A, என்ற முகவரியில் வசித்து வரும் கோகிலாவதி த/பெ மாரியப்பன் எனும் நான் கடந்த 10/06/2026 அன்று சிவகங்கை பேருந்து நிலையம் அருகில் என்னுடைய அசல் பத்திரம் ஜெராக்ஸ் கடை செல்லும் வழியில் தவறிவிட்டது .சொத்துவிபரம் சிங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 9247/2018ஆவண எண்ணாகபதிவுசெய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தை பற்றி சிவகங்கை காவல் நிலையத்தில் 21/09/2026 அன்று ஆன்லைனில் புகார் எண்ணாக OLC.6092600060128 பதிவு செய்யப்பட்டது. அசல் ஆவணத்தை கண்டெடுத்தவர்கள் அருகில் உள்ளகாவல்நிலையத்தில்அல்லது கீழ்கண்டமுகவரியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மா.கோகிலாவதி
த/பெ மாரியப்பன்
க/எண், 2/56A சிதம்பரம் நகர்
சாம்பவிகா பள்ளி எதிரில்
சிவகங்கை மாவட்டம் -630561
செல்:9080656119



# மானாமதுரையில் இரு பள்ளிகளில் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்



மானாமதுரை, செப்.23- பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கல்குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் D.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அவர் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவை வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்ததுடன், மாணவர்களுடன் அமர்ந்து காலை உணவு அருந்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்), ஆய்வாளர், அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் மற்றும் மானாமதுரை மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## “ரசீது கொடுங்க... பணத்தை வாங்குங்க!”

# கடன் வழங்க ரூ.500 லஞ்சம் கேட்ட கூட்டுறவுச் சங்க ஊழியர்களைத் திணறடித்த பெண்கள்: வீடியோ வைரல்

இளையான்குடி, செப்.23-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம் முனைவென்றி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், கடன் பெற வந்த கிராமத்துப் பெண்களிடம் ஊழியர்கள் ரூ.500 லஞ்சம் கேட்டதாக எழுந்த விவகாரம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஊழியர்களிடம் பெண்கள் நேருக்கு நேர் நியாயம் கேட்டு வாக்குவாதம் செய்த வீடியோ காட்சி தற்போது சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.



முனைவென்றி மற்றும் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த பெண்கள், கறவை மாடு பராமரிப்பு மற்றும் விவசாயத் தேவைகளுக்காக அரசு வழங்கும் கடன் பெற முனைவென்றி கூட்டுறவு கடன் சங்கத்திற்குச் சென்றுள்ளனர். அப்போது அங்கிருந்த ஊழியர்கள், கடன் நடைமுறைச் செலவு என்ற பெயரில் பயனாளிகள் ஒவ்வொருவரிடமும் தலா ரூ.500 கேட்டு வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது.

ஊழியர்களின் செயலால் ஆத்திரமடைந்த பெண்கள், கையில் ரூ.500 நோட்டுகளை நீட்டியபடி அதிகாரிகளிடம் சரமாரி கேள்விகளை எழுப்பினர். "இது அரசு வழங்கும் கடன் உதவி; இதற்கு எதற்காகத் தனியாக ரூ.500 தர வேண்டும்? அப்படி வாங்குவது அரசு விதிகளுக்கு உட்பட்டது என்றால், உடனடியாக அதற்குரிய அதிகாரப்பூர்வ ரசீதை வழங்குங்கள்" என்று கூறி பணத்தை மேஜையில் நீட்டினர்.

பெண்கள் பணத்தை நீட்டி ரசீது கேட்டவாறே செல்போனில் வீடியோ பதிவு செய்வதைக் கண்ட ஊழியர்கள், பதற்றமடைந்து பணத்தைப் பெறாமல் பின்வாங்கினர். இதனால் ஆவேசமடைந்த பெண்கள், "கால் கடுக்க ஆட்டோ பிடித்து இங்கு வந்து நிற்கிறோம். நியாயமாக வாங்குவதாக இருந்தால் வீடியோ எடுப்பதைக் கண்டு ஏன் பயப்படுகிறீர்கள்? தைரியம் இருந்தால் பணத்தை வாங்கிவிட்டு ரசீது கொடுங்கள்" எனச் சாடினர்.

தொடர்ந்து பேசிய பெண்கள், "இங்கு சுமார் 100-க்கும் மேற்பட்டோருக்குக் கடன் வழங்கப்படுகிறது என்றால், ஆளுக்கு ரூ.500 வீதம் எவ்வளவு பெரிய முறைகேடு நடக்கிறது? கேட்கும் லஞ்சத்தைக் கொடுக்காவிட்டால் கடனைத் திருப்பிச் செலுத்த விடாமல் அலைக்கழிப்பீர்களா?" என அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். பெண்களின் அதிரடி கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறிய அலுவலக ஊழியர்கள், "நாங்கள் பணம் கேட்கவில்லை, கடனைக் கட்டுங்கள்" என்று மழுப்பியபடி ஆவணங்களை ஒதுக்கிவைக்க முயன்றனர்.

அரசு ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்திற்காக வழங்கும் திட்டங்களில் நடக்கும் இதுபோன்ற மறைமுக லஞ்ச வசூலைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், முனைவென்றி கூட்டுறவு சங்கத்தில் உடனடியாக நேரடி ஆய்வு மேற்கொண்டு முறைகேட்டில் ஈடுபட்ட ஊழியர்கள் மீது மாவட்ட நிர்வாகமும் கூட்டுறவுத் துறையும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# தேவகோட்டை அருகே கோவில் நில விவகாரம்: அறநிலையத்துறை செயல் அலுவலர் மீது கிராம மக்கள் குற்றச்சாட்டு

தேவகோட்டை, செப்.23-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே கோட்டூர் நயினார்வயல் கிராமத்தில் உள்ள அகத்தீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் தொடர்பாக, அறநிலையத்துறை செயல் அலுவலர் மீது கிராம மக்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

அகத்தீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமாக சுமார் 200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் உள்ளதாகவும், அந்த நிலங்களில் கிராமத்தைச் சேர்ந்த பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்கள் பல தலைமுறைகளாக விவசாயம் செய்து வருவதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.



ஆண்டுக்கு ஒருமுறை பருவமழையை நம்பி நெல் சாகுபடி செய்து வருவதாகவும், கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

கடந்த காலங்களில் நிலத்தில் விளையும் தானியங்களை கோவிலுக்கு காணிக்கையாக வழங்கி வந்ததாகவும், பின்னர் ஏக்கருக்கு ரூ.300 முதல் ரூ.500 வரை செலுத்தி வந்ததாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஏக்கருக்கு ரூ.6 ஆயிரம் முதல் கூடுதல் தொகை செலுத்த வேண்டும் என அறநிலையத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இதை எதிர்த்து நீதிமன்றத்தை அணுகியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

தற்போது பருவமழையைத் தொடர்ந்து விவசாயப் பணிகளை மேற்கொண்டு வரும் நிலையில், விவசாயப் பணிகளைத் தடுக்கும் வகையிலும், கிராம மக்களிடையே சாதி ரீதியான பிளவை ஏற்படுத்தும் வகையிலும் செயல் அலுவலர் செயல்படுவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டினர். இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து செயல் அலுவலர் அல்லது அறநிலையத்துறையின் விளக்கம் கிடைத்தால் அதையும் செய்தியில் சேர்ப்பது அவசியமாகும்.

"எங்கள் கிராமத்தில் அனைத்து சமூக மக்களும் ஒற்றுமையாக விவசாயப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இந்த ஒற்றுமையைப் பாதிக்கும் வகையில் செயல்படுவதாக நாங்கள் கருதும் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மீது விசாரணை நடத்தி, உரிய துறைரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கிராம மக்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161